முருகப்பெருமான் துணை

**மகான் வராகிமிகி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.06.2022, புதன்கிழமை

1. ஞானவழி காட்டும் அரங்கனே
ஞானிகளை உலகினில் படைக்க
தானதரும சக்திதனை காட்டி
தவபலமாக அருளும் தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது மிதுன திங்கள்
ஆசிபட முதல்திகதி கணக்கன் வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் முதல் நாள், 15.06.2022 புதன்கிழமை)
அருளாசி தனை வராகிமிகி யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தருமவழி காட்டும்
ஞான தேசிகன் உண்மை வழிகளை
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே மக்களின் தனிப்பட்ட
வாழ்வாதார நிலை உயரும்
கரும வினைகள் யாவும் விலகும்
கடைத்தேற உண்டான வழிவகை
5. வழிவகை தேடல் பெருகும்
வறுமை வாராத காப்பும்
பழிபாவம் சேராத செயல்பாடும்
பண்பான வார்த்தையும் நடத்தையும்
6. நடத்தையும் பெருகி இனிதே
நல்லதே நினைக்கும் செய்யும்
நடைமுறைகள் ஓங்கி நிற்கும்
ஞானதேசிகன் ஞானமும் பயில
7. பயில எதிலும் எவரிடமும்
பயந்தோ ஏமாற்றமோ இல்லா
உயர்வான மனபலம் திடம்
உண்மை உழைப்பு மேலான திடம்
8. திடமான நிலைகள் கூடி
தேவைகளை நியாயமான வழி
தடையின்றி பூர்த்தி செய்தும்
தவராஜன் ஆசிபட பொருள்வளமும்
9. வளமும் கூடி இனிதே
வளர்ச்சி நிலை காண்பர்
சலனமற அரங்கன் கரம்பட
சடாட்சர தீட்சை ஏற்று

10. ஏற்றுமே செபதபம் காண
எல்லாம் குருவேயென சரணடைவு
ஆற்றல்பட கண்டுத் தொடர
அழியாமை எனும் மேல்கதி

11. மேல்கதி இலகுவாய் அடைந்து
மேலவர்கள் ஆசிபட ஞானியாவர்
நல்வித மக்கள் படைபெருக
ஞான ஆட்சிக் காலம் சடுதி காணும்
அருளாசி முற்றே

–சுபம்–